II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**LAOP.273 of 2004** மற்றும் **277/2004**

Deposition of witness for the Respondent / RW1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 17.02.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | R.Senthamarai Selvi | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>கோரிக்கையாளர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>

இந்த கோரிக்கை மனு தொடர்பாக சர்வே எண்.737/1 ல் 0.07.0 ஹெக்டேர் நிலம் மற்றும் புல எண்.654/2 ல் 0.50.0 மற்றும் 654/3 ல் 0.10.5 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டது அப்போது அதன் உரிமையாளர்கள் மற்றும் நலன் சார்ந்தோர் என பக்தவச்சலம், முத்து, மஸ்தான் மற்றும் கெனவள்ளி ஆகியோருக்கு பிரிவு 12(2) ன் படி 30 நாட்கள் கால அவசாகம் கொடுத்து அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் கோ.சா.ஆ.3 ன் அசல் ஆவணத்தில் பின்புறம் உள்ள மேற்குறிப்புகள் எங்கள் துறையால் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. நில உரிமையாளர்கள் தாங்களாகவே அந்த மேற்குறிப்பை செய்திருக்க முடியாது என்றால் என்னால் சொல்லமுடியாது. எங்களது துறையின் கவனக்குறைவால் தான் கோரிக்கையாளர்கள் தங்களுக்குரிய இழப்பிட்டை பெற இயலாமல் அலைகழிக்கப்பட்டுள்ளனர் என்றால் சரியல்ல. நான் ஆவணங்களின் படி தான் சாட்சியம் அளிக்கிறேன். அந்த சமயத்தில் அவர்கள் ஆஜராகவில்லை. நீதிமன்றத்தில் தொகையை வைப்பீடு செய்த போது இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. நாங்கள் கோரிக்கையாளர்களை

வேண்டுமென்றே நிராகரித்துவிட்டு அவர்கள் ஆஜராகவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 2003 ம் ஆண்டு இந்த நிலம் மனைகளாக பிரிப்பதற்காக கையகப்படுத்தப்பட்டது. அந்த நடவடிக்கைகள் எப்போது முடிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. விசாரணைக்கு அதன் உரிமையாளர்கள் யாரும் ஆஜராகாததால் அவர்களை பற்றிய விவரங்கள் எதுவும் எங்களுக்கு தெரியாது. வழக்கு சொத்தின் உரிமை மற்றும் உரிமை மூலம் முத்து, மஸ்தான், கௌனவள்ளி ஆகியோருக்கு மட்டும் தான் உள்ளது என்றும் அதற்கான உரிமை ஆவணங்களும் அவர்களிடம் தான் உள்ளன என்றும் பக்தவச்சலத்திற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் இதனை பொருத்து தான் கோரிக்கையாளர்கள் இழப்பீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றாலும் அதனை இந்த நீதிமன்றம் தான் முடிவு செய்ய முடியும்.

மறு விசாரணை–

மனு சொத்துதொடர்பான உரிமையாளர்கள் யார் என்று தெரியாத நிலையில் தான் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மறு குறுக்கு விசாரணை – இல்லை.